**O.S. No. 201 /2018**

**Date:18.04.2026**

**வா.சா.1 புஷ்பலதா**

**1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி எனது மருமகள் என்றால் சரிதான். இறந்து போன எனது மகன் ராஜகுணசேகரன் என்பவரின் மனைவி தான் இந்த 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். இறந்து போன ராஜகுணசேகரன் பொறியாளராக மஸ்கட்டில் வேலை பார்த்து வந்தார். வெளிநாட்டில் வேலை பார்த்து வந்த எனது மகன் ராஜகுணசேகரன் இந்த 1ம் பிரதிவாதியை காதல் திருமணம் செய்து கொண்டார். எனது மகன் எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்றால் ரூ. இரண்டு லட்சத்திற்கு மேலாக வாங்கினார். எனது மகன் 2006ல் வேலைக்கு சென்றார். 2006ல்இருந்து வேலை பார்த்து வந்த சம்பளத் தொகையை எங்களுக்குத்தான் இறந்து போன ராஜகுணசேகரன் அனுப்பி வைத்தார் என்றால் இல்லை. இறந்து போன ராஜகுணசேகரன் வேலைக்கு சென்ற பின்பு தான் பிரதிவாதியை காதலித்து 2010ல் திருமணம் செய்து கொண்டார். 2010ல் தான் நாங்கள் புதிதாக வீடு கட்டினோம். மேற்படி வீடு தலைவன்கோட்டை கிராமத்தில் உள்ளது. மேற்படி வீடு சுமார் 50லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது என்றால் ரூ. 15,00,000/-ல் தான் கட்டப்பட்டது. மேற்படி வீடு கட்டுவதற்கு இறந்து போன ராஜகுணசேகரன் தான் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு புளியங்குடியில் உள்ள இந்தியன் ஓவர் சீஸ் வங்கியில் கணக்கு உள்ளது. எனது கணவர் சுப்பையா பாண்டியன் இந்திய ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார். எனது கணவருக்கு சங்கரன்கோவில் இந்தியன் வங்கியில் கணக்கு இருந்து வருகிறது. எனது மகனான இறந்து போன ராஜகுணசேகரன் என்பவருக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்ற விவரம் தெரியாது. எனது வங்கி கணக்கிற்கும், எனது கணவரின் வங்கி கணக்கிற்கும் இறந்து போன ராஜகுணசேகரன் என்பவர் 2006ல் இருந்து வேலை பார்த்த சம்பளத் தொகைகளை அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை எனது வங்கி கணக்கு மற்றும் எனது கணவரின்

வங்கி கணக்கை பார்த்தால் தான் தெரிய வரும் என்றால் சரிதான். எனது கணவருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் தலைவன் கோட்டை கிராமத்தில் உள்ளது என்றால் அவற்றை விற்றுதான் வீடு கட்டினோம். எனது வழக்கில் 2, 3 பிரதிவாதிகளின் அலுவலகம் உடுமலைப்பேட்டை மற்றும் கோயமுத்தூரில் இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ள தபசில் காப்பீட்டில் அசல் காப்பீட்டு பத்திரம் 1ம் பிரதிவாதி கைவசம் தான் இருந்தது என்றால் சரிதான். நான் மேற்படி பாலிசிக்கு தொகை கட்டியதாக ஏதாவது ரசீது உள்ளதா என்றால் நான் செலுத்தி என் மகனிடம் கொடுத்ததால் அவர் கைவசம் உள்ளது. எனது மகன் இறக்கும் நாள் வரை அவனும் அவனது மனைவியான 1ம் பிரதிவாதியும் எனது வீட்டிற்கு வந்து போய் தான் இருந்தனர். மேற்படி அவர்கள் இருவருக்கும், எங்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எனது மகனின் திருமணம் எங்களது வீட்டின் கிரகபிரவேசத்திற்கு பின்னர் தான் நடைபெற்றது. எனது வீட்டு கிரகபிரவேசத்தை எனது மகன் உடன் இருந்து தான் நடத்தினார் என்றால் சரியல்ல. தாவா பாலிசி இறந்து போன ராஜகுணசேகரனால் பணம் செலுத்தி எடுக்கப்பட்டு அவரது மனைவியான 1ம் பிரதிவாதி நியமனதாரராக இருந்து அந்த காப்பீட்டின் தொகையினை 2, 3 பிரதிவாதிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளார் என்றாலும், அந்த தொகைகளை இறந்து போன ராஜகுணசேகரன் வாங்கியிருந்த கடன்களுக்கு செலுத்தி தீர்த்து விட்டார் என்றாலும் , தாவா காப்பீட்டின் படி வந்த எந்த தொகைகளையும் இந்த 1ம் பிரதிவாதி அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடமிருந்து எந்த பாகப் பிரிவினை பரிகாரம் கோர எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகள் அனைவரும் சமூக நீதிமன்ற வரம்பிற்கு வெளியே இருந்து வருவதால் , வழக்கில் காட்டியுள்ள வழக்கு மூலங்கள் சமூக நீதிமன்ற ஆள்வரை எல்லைக்குள் இல்லாததாலும், சமூக நீதிமன்றத்திற்கு வழக்கில் சேர்க்க அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல. இறந்து போன ராஜகுணசேகரன் என்பவருக்கு பாத்தியம் உள்ள அசையா சொத்துக்களில் பாகம்

ஏதும் கொடுக்காமல் மோசடி செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த காப்பீட்டைத் தவிர, வேற அசையா சொத்துக்களையும், இறந்து போன ராஜகுணசேகரன் என்பவருக்கு பாத்தியப்பட்ட அசையும் சொத்துக்களையும் காட்டாததால் இந்த வழக்கு பகுதி பாகப் பிரிவினை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் வாதி கோரிய பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.